பொறியியல் சேர்க்கைக்கு – கடந்த

# 29 நாட்களில் 2,90,678 மாணாக்கர்கள் பதிவு செய்துள்ளனர்!

## உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!



*சென்னை, ஜுன்.5- தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான விண்ணப் பப் பதிவு 07.05.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. நேற்று (04.06.2025) வரை 2,90,678 மாணாக்கர்கள் விண்ணப்பப் பதிவு செய்துள்ளதாக உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது :-*

*கடந்த 07.05.2025 அன்று தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு தொடங்கப்பப்பட்டது. நேற்று (04.06.2025) மாலை 6 மணி நிலவரப்படி 2,90,678 மாணாக்கர்கள் விண்ணப்பப் பதிவு செய்துள்ளனர். இதில் 1,27,337 மாணவர்களும், 1,05,395 மாணவிகளும் ஆக மொத்தம் 2,32,732 மாணாக்கர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி உள்ளனர்.*

*இதுவரை விண்ணப்பிக்காத மாணாக்கர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, வரும் 06.06.2025க்குள் www.tneaonline.org என்ற இணையதள முகவரியில் பொறியியல் சேர்க்கைக்கான தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், விண்ணப்ப பதிவு செய்த மாணாக்கர்கள் தங்களது சான்றிதழ்களை 09.06.2025க்குள் பதிவேற்றம் செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.*

*மாணாக்கர்களுக்கு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் தமிழ்நாடு முழுவதும் 110 தமிழ்நாடு பொறியியல் மாணாக்கர் சேரக்கை சேவை மையங்கள் (TFC Centres) நிறுவப்பட்டுள்ளன. அந்த சேவை மையங்களை தொடர்பு கொள்ளலாம் மற்றும் 1800 425 0110 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவோ தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை தெளிவுப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.*




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

நீலகிரி மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.06.2025 திங்கள்கிழமை | காலை 11.00 மணி | நீலகிரி | பிரீத்தி கிளாசிக் டவர்ஸ், குன்னூர் சாலை, உதகை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–1–இல் சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | சோழிங்கநல்லூர் | கைலாஷ் கார்டன், பழைய மகாபலிபுரம் சாலை, சோழிங்கநல்லூர், சென்னை. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 04-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளையொட்டி முழு உருவ சிலைக்கு மாவட்டக் கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மாலை அணிவித்தார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்ட் கே.ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களில் –

# ஜூன் 5, 6 இரு நாட்கள் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு!

## பதிவுத்துறைத் தலைவர் அறிவிப்பு!

*சென்னை, ஜுன்.5- சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது .*

*தற்போது வைகாசி மாதத்தில் 05.06.2025 மற்றும் 06.06.2025 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.*

*இதனை ஏற்று வைகாசி மாதத்தில் 05.06.2025 மற்றும் 06.06.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.*

*இவ்வாறு பதிவுத்துறைத் தலைவர் அறிவித்துள்ளார்.*


